(10 புள்ளி)

1 கோடிடப்பட்ட கவிதை வரிக்கு ஏற்ற **பழமொழியைத்** தெரிவு செய்க.

| |
|---|
| உள்ளத்திலே உரம் வேணுமடா<br>உண்மையிலே திறம் காணுமடா<br>**ஒற்றுமையால் வெற்றி ஓங்குமடா!** |

**A.** முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்

**B.** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

**C.** ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

**D.** மனம் உண்டானால் மார்க்கம் உண்டு

2. கீழ்க்காணும் காலியிடத்திற்குப் பொருத்தமான இணைமொழியைத் தெரிவு செய்க.

| |
|---|
| வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தம்பி செய்தத் தவற்றினை அக்காள் ____________ இன்றி அம்மாவிடம் கூறினாள். |

A. அரை குறை

B. ஒளிவு மறைவு

C. பழக்க வழக்கம்

D. நன்மை தீமை

3. கொடுக்கப்பட்டுள்ள படத்திற்கு ஏற்ற உலகநீதியைத் தெரிவு செய்க.




A. மாதாவை யொருநாளு மறக்க வேண்டாம்
B. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
C. போகாத விடந்தனிலே போக வேண்டாம்
D. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்

LIVEWORKSHEETS

4. கொடுக்கப்பட்ட **திருமுறையின் வரிகளுக்குச்** சரியான பொருளைத் தெரிவு செய்க.

| |
|---|
| *மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*<br>*ஈசன் எந்தை இணையடி நீழலே.* |

A. குற்றமற்ற வீணையின் இசை காதுக்கு இனிமை அளிப்பது போலவும் மாலை வேளை உதிக்கும் சந்திரன் கண்களுக்குக் குளிர்ச்சியளிப்பது போலவும்.

B. மென்காற்று உடலுக்கு இதமளிப்பது போலவும் இளவேனில் பருவம் உண்பதற்குச் சுவையான பழங்களைத் தருவது போலவும்

C. மலர்களிலுள்ள தேனை உறிஞ்ச வண்டுகள் ரீங்காரமிடும் குளிர்ச்சியான தடாகம் போலவும் பேரின்பத்தை அளிக்கவல்லது என் தந்தையாகிய இறைவனின் திருவடிகளின் நிழலாகும்.

D. விண்ணில் தோன்றும் சந்திரன் உலகிற்கு ஒளி தருவதைப் போலவும் இறைவனின் கடைக்கண் பார்வை இவ்வுலகிற்கு அருள் தரும்.

5 கீழ்க்காணும் வாக்கியத்திற்கு ஏற்ற **பழமொழியைத்** தெரிவு செய்க.

| |
|---|
| பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்த அண்ணன் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றதும் தனக்கு உதவி செய்ய அண்ணன் உடன் இல்லையே எனத் தம்பி ஏங்கினான். |

A. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

B. தீட்டின மரத்திலே கூர் பார்ப்பதா?

C. அன்பான நண்பனை ஆபத்தில் அறி

D. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

6 கொடுக்கப்பட்ட சூழலில் விடுபட்ட இரட்டைக் கிளவிகளைத் தெரிவு செய்க

| |
|---|
| வழிப்பறிகொள்ளையனைக் கண்ட காவல் அதிகாரி _____i_____ என பற்களைக் கடித்துக் கொண்டே அவன் சட்டையைப் பிடித்துத் ____ii____ என இழுத்துச் சென்றார். |

LIVEWORKSHEETS

| | i | ii |
|---|---|---|
| A | கடுகடு | தரதர |
| B | சரசர | தகதக |
| C | நறநற | தரதர |
| D | நறநற | தடதட |

7 கீழ்க்காணும் செய்யுள் எவ்வகையைச் சார்ந்தது?

| |
|---|
| மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்................. |

**A.** நல்வழி **C.** நன்னெறி

**B.** மூதுரை **D.** நீதிநெறி விளக்கம்

**8** சூழலுக்குப் பொருத்தமான மரபுத்தொடரைத் தெரிவு செய்க.

| |
|---|
| திரு.வாசுவின் மகன் கூடா நட்பினால் போதைப் பித்தனாகி விட்டான். தன் மகனின் செயலால் திரு.வாசு ஊராரின் முன் அவமானம் அடைந்தார். |

| | |
|---|---|
| A | தலை குனிதல் |
| B | கை கூடுதல் |
| C | கடுக்காய் கொடுத்தல் |
| D | கை கழுவுதல் |

9 திருக்குறளில் விடுபட்ட இடத்தை நிறைவு செய்க.

| |
|---|
| காலத்தி னாற்செய்த நன்றி ________________<br>**ஞாலத்தின்** மாணப் பெரிது |

A சிறிதெனினும் C பெரிதெனினும்

B இனிதெனினும் D எளிதெனினும்

LIVEWORKSHEETS